அம்பாசமுத்திரம் தொகுதியிலுள்ள பாபநாசத்தில் கட்டப்பட்டுள்ள பெரிய பாலம்.

*வினா எண். 90—திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம்: மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அம்பாசமுத்திரம் தொகுதியிலுள்ள பாபநாசத்தில் ஒரு பெரிய பாலம் கட்டப்பட்டு ஒரு வருடத்திற்கு மேலாகியும் போக்குவரத்திற்கு திறந்துவிடப்படவில்லையென்பதுஉண்மையா?

(ஆ) ஆம் எனில் இது பற்றிய விவரம் யாது?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: (அ) மற்றும் (ஆ): அம்பாசமுத்திரம்—பாபநாசம் சாலையில் கி. மீ 9/6இல் பாலம் கட்டும் பணி முடிக்கப்பட்டு அம்பாசமுத்திரம் பக்கம் செல்லும் அணுகு சாலைக்கு தற்சமயம் கப்பி போடப்பட்டுள்ளது. இச்சாலையில் தார் பரப்பும் பணி முடிவுற்றதும், பாலம் போக்குவரத்திற்குத் திறந்துவிடப்படும்.

திரு பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம்: கேள்வி கேட்டது ரொம்ப காலத்திற்கு முன்னாலே, அதற்குப் பதில் கிடைத்ததும் ரொம்ப காலத்திற்கு முன்னாலே என்று நினைக்கிறேன், இப்போது இங்கே பதில் வந்திருக்கிறது, ஆனால் அங்கே பஸ்கள் எல்லாம் ஓடிக்கொண்டிருக்கின்றன, இதற்கென்று போடப்பட்ட திட்ட மதிப்பீடு எவ்வளவு; செலவிடப்பட்ட தொகை எவ்வளவு என்பதை அறியலாமா?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: பாலம் ஏற்கெனவே திறந்து விடப்பட்ட காரணத்தினால் இனிமேல் போய் திட்டத்தின் மதிப்பு எவ்வளவு என்று கேட்பது எப்படிச் சரியாக இருக்கும்?

திரு ப. நெடுமாறன்: மாண்புமிகு அவைத் தலைவர் அவர்களே, இந்த பாபநாசம் ஒரு புகழ்பெற்ற யாத்திரிகர்கள் ஸ்தலம். அந்த ஆற்றிலே குளிப்பதற்காக மக்கள் பல்வேறு மாவட்டங்களிலிருந்தும் வந்துகொண்டு இருக்கிறார்கள். பாபநாசத்திலே உள்ள படித்துறைகள் எல்லாம் 500,600 வருடங்களுக்கு முன்னாலே கட்டப்பட்ட காரணத்தினால் அவையெல்லாம் இடிந்து சரிந்துகொண்டிருக்கின்றன. ஆகவே அவற்றைச் செம்மைபடுத்த நடவடிக்கை எடுக்கப்படுமா?

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மூலக்கேள்விக்கு இது சம்பந்தம் இல்லாதது.

திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம்: தலைவர் அவர்களே, தவறான தகவலை அமைச்சருக்குக் கொடுத்திருக்கிறார்கள். பால வேலை முடிந்த பிறகு அதிகாரிகள் உடனடி

1981 ஆகஸ்ட் 27]

யாகத் தகவல் தராமல் அதிகாரிகள் மெத்தனப் போக்ோடு இருந்திருக்கிறார்கள், அப்படிப்பட்ட நிலைமைகளைப் போக்க அரசாங்கம் நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: மாண்புமிகு உறுப்பினர் கேள்வி கேட்டது பல மாதங்களுக்கு முன்பாக. கேள்வி கேட்ட உடனே உடனடியாக வேலைகளை அவர்கள் முடிக்கவேண்டுமென்ற முறையிலே முடித்து இருக்கிறார்கள், அதற்காக நன்றி சொல்லவேண்டும், பாராட்டுச் சொல்லவேண்டுமே தவிர நடவடிக்கை எடுப்பது சரியாக இருக்காது. நில ஆர்ஜிதம் காரணமாகத்தான் பாலம் தடைபட்டதே தவிர வேறு எந்தக் காரணமும் இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

[முற்பகல் 9.30]

திரு. ஜே. ஹேமச்சந்திரன்: பேரவைத் தலைவரவர்களே தமிழ்நாட்டில் 1980 ஆம் ஆண்டு பட்ஜெட் ஆண்டில அனுமதிக்கப்பட்ட பாலம் இன்னும் தொடங்கப்படாமல் இருக்கும் நிலை....

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மூலக்கேள்விக்கும் இதற்கும சம்பந்தமில்லை.

தர்மபுரி மாவட்டம் குன்னத்தூரில் புதிய பாலம் கட்டும் திட்டம்.

*வினா எண். 91—திரு. பி. எஸ். துரைசாமி: மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவிக்கு விடையளிப்பாரா—

தர்மபுரி மாவட்டம் குன்னத்தூரில் புதிய பாலம் கட்டும் திட்டம் தற்போது எந்த நிலையில் உள்ளது?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: இப்பணி அரசு அங்கீகாரம் பெற்ற எந்தத் திட்டத்திலும் இடம் பெறவில்லை. இப்பணி நிதி நிலைக்கேற்ப இனிவரும் ஆண்டுகளில் மேற்கொள்வது பற்றி பரிசீலிக்கப்படும்.

திரு. க. இரா. சின்னராசு: பேரவைத் தலைவரவர்களே, குன்னத்தூர் கிராமத்திற்கு அருகில் ஆற்றுக்குக் குறுக்கே இந்தப் பாலத்தைக் கட்ட வேண்டும் என்று நீண்டகாலமாகக் கேட்டுக் கொண்டிருக்கிறார்கள். தற்பொழுது திருப்பத்தூரில் அமைக்கப்பட்டிருக்கும் சர்க்கரை ஆலைக்கு கரும்புகள் செல்ல வேண்டும், வாகனங்கள் செல்ல வேண்டும் என்றால் அந்த வழியாகச் செல்ல வேண்டியுள்ளது. எனவே, அந்தக் குறுகிய பாலத்தை உடனடியாகக் கட்டுவதற்கான திட்டத்தைத் தீட்ட முயற்சியெடுத்துக் கொள்ளுமாறு அரசைக் கேட்டுக்கொள்கிறன். அதை இந்த ஆண்டுக்குள்ளாக எடுத்துக் கொள்வதற்கு அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: தலைவரவர்களே, இது பாம்பாற்றுக்குக் குறுக்கே கட்டப்பட வேண்டிய பாலம்; பார்த்துத்தான் செய்ய வேண்டும்.